முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1598

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.02.2024,** செவ்வாய்கிழமை

1. அறமெனும் சூட்சும பலம் கொண்டு
அகிலத்தை மாற்றம் புரியவேண்டி
வரம் பெற்று வந்த ஆறுமுக அரங்கனே
வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
உரைத்திடுவேன் சோபகிருது சால் திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் மாசி மாதம் முதல் நாள், 13.02.2024, செவ்வாய்கிழமை)
குறையில்லா அரங்கன் தர்மமே
குவலயத்தை மீட்கக் கூடும்
3. குருவாக அரங்கன் தருகின்ற உபதேசமே
உலகோர்க்கு ஞானமாக ஆற்றல்பெருக்கம் தரக்கூடும்
கூடவே அரங்கன் குடில் அமுது உண்டு
உலக மக்கள் குவலயத்தில் பசிபிணி அகல இனிதே
4. அரங்கன் தருகின்ற உபதேசம் வழி
ஆன்மீக ஞான பலம் கூட்டி வர
வருகவே கலியுகத்தை மாற்றும்
வல்லமையாக அரங்கன் அவதாரம் சிறந்து நிற்க
5. நிற்கவே உலகோர் அரங்கனின் மகிமை அறிந்து
உண்மைபட ஓங்காரக்குடில் நோக்கி வந்து
அரங்கனின் ஆசிபட இனிதே
அறச்சேவை தொடர்ந்து செய்தால்
6. மறைபோற்ற இந்த உலகில்
மகான் வந்த நோக்கம்
குறைவின்றி நிறைவேறி அன்பர்கள் மூலம்
குவலயத்தில் ஞான ஆட்சி ஞானிகள் ஆட்சி

7. குருபரன் யானே இறங்கி தலைமை ஏற்று நடத்துகின்ற
குறைவில்லாத மகான்கள் ஆட்சியாக மாற்றம் பெறும்
மாற்றத்தை அரங்கன் ஞான சித்தர் காலமாக
மண்ணுலகுக்கு ஞான யுகமாக
8. ஆற்றல்பட சித்தி தந்து அருள இருக்க
அரங்கன் அவதாரம் புரிந்தால்
உலகுக்கு தேற்றம் உறுதி உறுதி
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–